# EXTREME CIRCLE Study Material

RACE Extreme CIRCLES

## Day 21 - 9th Tamil Term – II

### இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்

1. **ஒளிப்படி இயந்திரம்** (Photo copier) - கந்தகம் தடவிய துத்தநாகத் தட்டைக்கொண்டு, 1938-இல் உலகின் முதல் ஒளிப்படியை **செஸ்டர் கார்ல்சன்** எடுத்தார். இவரால் **1959-இல் ஜெராக்ஸ் இயந்திரம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.**
2. **கிரேக்க** மொழியில் **சீரோகிராஃபி** (Xerography) என்றால் **உலர் எழுத்துமுறை** (dry writing) என்று பொருள்.
3. **தொலைநகல் இயந்திரம்** (Fax) - 1846 - இல் ஸ்காட்லாந்துக் கண்டுபிடிப்பாளர் **அலெக்சாண்டர் பெயின்** (Alexander Bain) என்பார் குறியீடுகளை மின்னாற்றல் உதவியுடன் அச்சிடுவதில் வெற்றிகண்டு அதற்குரிய காப்புரிமையைப் பெற்றார்.
4. 1865-இல் பாரிஸ் நகரிலிருந்து லியான் நகரத்துக்குத் தொலைநகல் சேவை தொடங்கப்பட்டது.
5. 1985இல் அமெரிக்காவின் **ஹாங்க் மாக்னஸ்கி** (Hank Magnuski) என்பவர் **கணினி மூலம் தொலைநகல்** எடுக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தார். அந்த இயந்திரத்திற்கு **காமா ஃபேக்ஸ்** (Gamma) Fax) என்று பெயரிட்டு விற்பனைக்குக் கொண்டுவந்தார்.
6. **தானியங்கிப் பண இயந்திரம்** (Automated Teller Machine) - இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளரான **ஜான் ஷெப்பர்டு பாரன்** (John Shepherd Barron) என்பவர் தலைமையிலான குழுவொன்று, **பார்க்லேஸ் வங்கிக்காக** இலண்டனில் 1967 ஜூன் 27இல் **தானியங்கிப் பண இயந்திரத்தை** நிறுவியது.
7. “நான் இங்கிலாந்திலோ உலகின் எந்த மூலையிலோ இருந்தாலும் என் வங்கிப் பணத்தை எடுத்துப் பயன்படுத்துவதற்கொரு வழியைச் சிந்தித்தேன். சாக்லேட்டுகளை வெளித்தள்ளும் இயந்திரத்திலிருந்து யோசனை கிடைத்தது. அங்கு சாக்லேட்; இங்கே பணம்”, - **ஜான் ஷெப்பர்டு பாரன்.**
8. **ஆட்ரியன் ஆஷ்ஃபீல்டு** (Adrian Ashfield) என்பவர் 1962இல் **கடவுச்சொல்லுடன் கூடிய அட்டைக்கு** இங்கிலாந்தில் காப்புரிமை பெற்றிருந்தார். ஆரம்பத்தில் பெட்ரோல் தருவதற்குப் பயன்படுத்தவே காப்புரிமை தரப்பட்டது. அதுவே பின்னர் அனைத்துப் பயன்பாட்டுக்குமான காப்புரிமையாக மாற்றப்பட்டது.
9. அட்டை தேய்ப்பி இயந்திரம் - Swiping Machine
10. திறன் அட்டை - Smart card
11. ஆளறி சோதனைக் கருவி - Biometric Device
12. 1990-இல் **டிம் பெர்னெர்ஸ் லீ** (Tim Berners Lee) **வையக விரிவு வலை வழங்கியை** (www - server) உருவாக்கினார். **“இணையத்தில் இது இல்லையெனில், உலகத்தில் அது நடைபெறவேயில்லை!"** என்பது **லீயின்** புகழ் பெற்ற வாசகம்.
13. இங்கிலாந்தைச் சேர்ந்த **மைக்கேல் ஆல்ட்ரிச்** (Michael Aldrich) 1979-இல் **இணைய வணிகத்தைக்** கண்டுபிடித்தார்.
14. 1991-இல் **இணையம், பொதுமக்களின் பயன்பாட்டுக்கு** வந்தது.
15. **இந்தியத் தொடர்வண்டி தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழக இணைய வழிப் பதிவு (IRCTC)** - 2002ஆம் ஆண்டு இணையவழிப் பதிவு அறிமுகப்படுத்தப்பட்ட போது சராசரியாக ஒரு நாளைக்கு 29 பயணச்சீட்டுகள் இணையவழியே பதிவு செய்யப்பட்டன. ஆனால், 13 ஆண்டுகள் கழித்து 2015 ஏப்ரல் 1 அன்று ஒரே நாளில் 13 இலட்சம் பயணச்சீட்டுகள் பதிவு செய்யப்பட்டது ஒரு சாதனை.
16. **பத்தாம் வகுப்பு** மாணவர்களுக்குத் **தேசியத் திறனறித் தேர்வு** (National Talent Search Exam), **எட்டாம் வகுப்பு** மாணவர்களுக்குத் **தேசியத் திறனறித் தேர்வு மற்றும் கல்வி உதவித் தொகைத் தேர்வு** (National Means-cum -Merit Scholarship Scheme Exam), **கிராமப்புறப் பள்ளிகளில் படிக்கும் ஒன்பதாம் வகுப்பு** மாணவர்களுக்கு **ஊரகத் திறனறித் தேர்வு** (TRUST – Tamilnadu Rural Students Talent Search Examination) ஆகியவை நடத்தப்படுகின்றன

### ஓ, என் சமகாலத் தோழர்களே!

17. கவிஞர் வைரமுத்து தேனி மாவட்டத்திலுள்ள மெட்டூர் என்னும் ஊரில் பிறந்தவர்.
18. கவிஞர் வைரமுத்து இந்திய அரசின் உயர்ந்த விருதுகளுள் ஒன்றான பத்மபூஷண் விருதினைப் பெற்றவர்.

19. கவிஞர் வைரமுத்து கள்ளிக்காட்டு இதிகாசம் புதினத்துக்காக 2003ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்

20. கவிஞர் வைரமுத்து இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை ஏழு முறையும் மாநில அரசின் விருதினை ஆறு முறையும் பெற்றவர்.

21. “முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்

பூமி ஒன்றும் பாரமில்லை”, - **வைரமுத்து கவிதைகள் - வைரமுத்து**

**இலக்கணக்குறிப்பு:**

22. பண்பும் அன்பும், இனமும் மொழியும் – எண்ணும்மைகள்

23. சொன்னோர் – வினையாலணையும் பெயர்

24. “புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவன் ஏவா வான ஊர்தி”, - **புறநானூறு**

25. “அந்தரத் தார்மய னேஎன ஐயுறும்

தந்திரத்தால் தம நூல்கரை கண்டவன்

வெந்திற லான், பெருந் தச்சனைக் கூவி,"ஓர்

எந்திர வூர்திஇ யற்றுமின்" என்றான்” –

**சீவக சிந்தாமணி - நாமகள் இலம்பகம்**

**உயிர்வகை**

26. கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புல உணர்வுகளின் வாயிலாகவே அறிவு என்பதை நாம் பெறுகிறோம்.

27. ஆறாவது அறிவு மனத்தால் அறியப்படுவது என்பர்.

28. “ஒன்றறி வதுவே உற்றறி வதுவே

இரண்டறி வதுவே அதனொடு நாவே”, - தொல்காப்பியர்.

29. தமிழ்மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கணநூல் தொல்காப்பியம். இதனை இயற்றியவர் தொல்காப்பியர்.

30. தொல்காப்பியம் பிற்காலத்தில் தோன்றிய பல இலக்கண நூல்களுக்கு முதல் நூலாக அமைந்திருக்கிறது. இது எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்டுள்ளது.

31. எழுத்து, சொல் அதிகாரங்களில் மொழி இலக்கணங்களை விளக்குகிறது.

32. பொருளதிகாரத்தில் தமிழரின் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளையும் தமிழ் இலக்கியக் கோட்பாடுகளையும் இந்நூல் விளக்குகிறது.

33. பிறப்பியலில் எழுத்துகள் பிறக்கும் இடங்களை உடற்கூற்றியல் அடிப்படையில் விளக்கியிருப்பதை அயல்நாட்டு அறிஞர்களும் வியந்து போற்றுகின்றனர். இது தமிழர்களின் அறிவாற்றலுக்குச் சிறந்த சான்றாகும்.

| அறிவுநிலை | அறியும் ஆற்றல் | உரையாசிரியர்களின் எடுத்துக்காட்டு |
|---|---|---|
| ஓரறிவு | உற்றறிதல் (தொடுதல் உணர்வு) | புல், மரம் |
| ஈரறிவு | உற்றறிதல் + சுவைத்தல் | சிப்பி, நத்தை |
| மூவறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் | கரையான், எறும்பு |
| நான்கறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் | நண்டு, தும்பி |
| ஐந்தறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் | பறவை, விலங்கு |
| ஆறறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் +பகுத்தறிதல் (மனம்) | மனிதன் |

**விண்ணையும் சாடுவோம்**

34. சிவன் இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவர், இந்தப் பதவியை ஏற்றிருக்கும் முதல் தமிழர் என்னும் சிறப்புகளுக்கு உரியவர்.

35. சிவன் 2015ஆம் ஆண்டில் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குநராக இருந்து, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ISRO) தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

36. 1983ஆம் ஆண்டு, முதன்முதலில் பி.எஸ்.எல்.வி (Polar Satellite Launch Vehicle) திட்டத்தைத் தொடங்க, அரசாங்கம் இசைவு தந்தது.

37. விக்ரம் சாராபாய் 'இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார்

38. ஆரியபட்டா என்ற முதல் செயற்கைக்கோள் ஏவுதலுக்குக் காரணமானவர் - விக்ரம் சாராபாய்.

39. விக்ரம் சாராபாய் - செயற்கைக்கோள் உதவியுடன் தொலைக்காட்சி வழியாக 24,000 இந்திய கிராமங்களில் உள்ள ஐம்பது இலட்சம் மக்களுக்குக் கல்வியை எடுத்துச் செல்ல உதவினார்.

40. விக்ரம் சாராபாய் பெயரால் 'விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்' திருவனந்தபுரத்தில் செயல்பட்டுவருகிறது.

41. வானூர்தியில், வான்பயண மின்னணுவியல், கூட்டமைப் பொருள், கணினி தகவல் தொழில் நுட்பம் போன்றவை மேற்கொள்ளப்படும் இடம் – திருவனந்தபுரம்

42. விக்ரம் சாராபாய் முயற்சியால்தான் இஸ்ரோ தொடங்கப்பட்டது.

43. **சித்தாரா** (SITARA) - Software for Integrated Trajectory Analysis with Real time Application

- செயற்கைக்கோள் எந்தத் திசையில், எவ்வளவு கோணத்தில், எவ்வளவு நேரத்தில், எந்த இடத்தில், எவ்வளவு அழுத்தத்தில் விழும் என்று சொல்வதுதான் 'சித்தாரா'வின் பணி. (செயற்கைக்கோள் ஏவுஊர்தி பற்றிய முழு விவரங்களையும் மின்னிலக்க முறையில் சேகரிப்பது)

44. அப்துல்கலாம் இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய இந்திய அறிவியலாளர். தமிழ்நாட்டின் இராமேசுவரத்தைச் சேர்ந்தவர்.

45. ஏவுகணை, ஏவுகணை ஏவு ஊர்தித் தொழில்நுட்ப வளர்ச்சியில் கலாம் காட்டிய ஈடுபாட்டினால் அப்துல்கலாம், '**இந்திய ஏவுகணை நாயகன்**' என்று போற்றப்படுகின்றார்;

46. இந்தியாவின் உயரிய விருதான **பாரதரத்னா** விருது பெற்றவர் **அப்துல்கலாம்.**

47. வளர்மதி - அரியலூரில் பிறந்த இவர், 2015இல் தமிழ்நாடு அரசின் அப்துல்கலாம் விருதைப் பெற்ற முதல் அறிவியல் அறிஞர். இஸ்ரோவில் 1984ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார்.

48. 2012இல் உள் நாட்டிலேயே உருவான முதல் ரேடார் இமேஜிங் செயற்கை கோள் RISAT-1 திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் – **வளர்மதி**

49. 'நேவிக்' (NAVIC) என்ற செயலி கடல் பயணத்திற்காக உருவாக்கப்பட்டது.

50. விண்வெளித் துறையில் உள்ள தொழில் நுட்ப வகைகள் – **மூன்று**
    1. செயற்கைக்கோளை ஏவுவதற்கான தொழில்நுட்பம்
    2. செயற்கைக்கோளை ஏற்றிச்செல்லும் ஏவு ஊர்தி
    3. ஏவு ஊர்தியிலிருந்து விடுபட்ட செயற்கைக்கோள் தரும் செய்திகளைப் பெற்று அதைப் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவருதல்.

51. ஜி.எஸ்.எல்.வி. மார்க்-2 செயற்கைக்கோள் எடை 2.25 டன்லிருந்து 3.25 விரைவில் மாற்றப்படும்.

52. ஜி.எஸ்.எல்.வி. மார்க்-3 செயற்கைக்கோள் 3 டன்னிலிருந்து 6 டன்னாக விரைவில் அதிகமாக்கப்படும்.

53. **அருணன் சுப்பையா** இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் அறிவியலாளர் மற்றும் திட்ட இயக்குநர்.

54. அருணன் சுப்பையா பிறந்த ஊர் – **திருநெல்வேலி மாவட்டம் ஏர்வாடி அருகில் உள்ள கோதைசேரி**

55. 2013இல் மங்கல்யான் செயற்கைக்கோளை உருவாக்கிய இந்தியாவின் செவ்வாய் சுற்றுகலன் திட்டத்தின் திட்ட இயக்குநர் – **அருணன் சுப்பையா**

56. 'இளைய கலாம்' என்று அன்புடன் அழைக்கப்படுபவர் – **மயில்சாமி அண்ணாதுரை**

57. மயில்சாமி அண்ணாதுரை பிறந்த ஊர்– **கோவை மாவட்டம், பொள்ளாச்சியைச் சேர்ந்த கோதவாடி**

58. சந்திரயான்-1 திட்ட இயக்குநர் – **மயில்சாமி அண்ணாதுரை**

59. சர். சி. வி. இராமன் நினைவு அறிவியல் விருது பெற்றவர் – **மயில்சாமி அண்ணாதுரை**

60. மயில்சாமி அண்ணாதுரை தமது அறிவியல் அனுபவங்களை, **கையருகே நிலா** என்னும் நூலாக எழுதியுள்ளார்.

**வல்லினம் மிகா இடங்கள்:**

61. அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் – **மிகாது**

62. எது, எவை என்ற வினாப் பெயர்களின் பின் வல்லினம் – **மிகாது**

63. எழுவாய்த் தொடரில் வல்லினம் – **மிகாது**

64. மூன்றாம், ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் – **மிகாது**

65. விளித் தொடர்களில் வல்லினம் – **மிகாது**

66. பெயரெச்சத்தில் வல்லினம் – **மிகாது**

67. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் – **மிகாது**

68. 'படி' என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் – **மிகாது**

69. வினைத்தொகையில் வல்லினம் - **மிகாது**

70. வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் – **மிகாது**

71. எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் - **மிகாது**

72. உம்மைத் தொகையில் வல்லினம் – **மிகாது**

73. அன்று, இன்று, என்று, ஆவது, அடா, அடி, போன்ற என்னும் சொற்களின் பின் வல்லினம் - **மிகாது**

74. மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைத் தொடரில் வல்லினம் – **மிகாது**

75. நிலை மொழி உயர்திணையாக அமையும் தொடரில்வல்லினம் – **மிகாது**

76. சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களைத் தவிர ஏனைய உரிச் சொற்களுக்கு பின் வல்லினம் – **மிகாது**

77. அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவியில் வல்லினம் – **மிகாது**

78. ஐகார வரிசை உயிர்மெய் ஓரெழுத்துச் சொற்களாய் வர, அவற்றோடு கள் விகுதி சேரும்போது வல்லினம் - **மிகாது**

79. 'அக்னிச் சிறகுகள்' நூலின் ஆசிரியர் – **அப்துல் கலாம்**

80. 'மின்மினி' நூலின் ஆசிரியர் – **ஆயிஷா நடராஜன்**

81. 'ஏன், எதற்கு, எப்படி?' நூலின் ஆசிரியர் – **சுஜாதா**

82. நாக்குக்கு **நான்கு** ஆதார ருசிகள் - எலுமிச்சையின் **புளிப்பு**, சர்க்கரையின் **தித்திப்பு**, காபியின் **கசப்பு, உப்பு**. இவை தவிர **ஸேவரி** என்று சொல்கிற டேஸ்ட் எல்லாம் இந்த **நான்கு ஆதார ருசிகளின் கலப்பு**

83. தித்திப்பு - **நுனி நாக்கு**, உப்பு – பரவலாக, குறிப்பாக **நுனியில்**, கசப்பு – **உள்நாக்கு**; புளிப்பு, ஸேவரி – **நாக்கின் வலது, இடது** புறங்கள்.

84. ஒரு சராசரி மனிதனுடைய நாக்கில் **9,000 சுவை அரும்புகள்** உண்டு.

85. மூக்குக்கு மொத்தம் **ஏழு வாசனைகள்** - கற்பூர வாசனை, பெப்பர்மிண்ட் வாசனை, மலர்களின் வாசனை, மஸ்க் என்னும் அரபுசேக் செண்ட் வாசனை, ஈத்தர் அல்லது பெட்ரோல் வாசனை, அழுகிய முட்டை வாசனை, காட்டமான அமில வாசனை.

86. “பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும் சிங்கமே! வான வீதி திகுதிகு எனஎ ரிக்கும்”, - **பாரதிதாசன்**

**கல்வியில் சிறந்த பெண்கள்**

87. ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார், பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைப்பாடினியார், வெள்ளி வீதியார், காவற்பெண்டு, நப்பசலையார் – **சங்க கால பெண்பாற் புலவர்கள்**
88. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் – **முத்துலெட்சுமி**
89. இந்திய பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர் – **முத்துலெட்சுமி**
90. சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர் – **முத்துலெட்சுமி**
91. சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்பெண்மணி – **முத்துலெட்சுமி**
92. டாக்டர். முத்துலெட்சுமி அடையாற்றில் அவ்வை இல்லம் நிறுவிய ஆண்டு – **1930**
93. டாக்டர் முத்துலெட்சுமி புற்றுநோய் மருத்துவமனை நிறுவப்பட்ட ஆண்டு –**1952**
94. தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத்தடைச் சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர் – **முத்துலெட்சுமி**
95. பெண்மை புரட்சிக்கு உதாரணம் – **முத்துலெட்சுமி**
96. “முடியாது பெண்ணாலே என்கின்ற மாயையினை முடக்க எழுந்தவர் யாரு”, - **தந்தை பெரியார்**
97. “விடியாது பெண்ணாலே என்கின்ற கேலியினை மிதித்துத் துவைத்தவர் யாரு…”, - **பாரதியார்**
98. “பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை தீருமோவென இடிமுழக்கம் செய்தவர் யாரு…”, - **பாரதிதாசன்**
99. பெண்மை துணிவுக்கு உதாரணம் – **மூவலூர் இராமாமிர்தம்**
100. தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி, எழுத்தாளர் திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர் – **மூவலூர் இராமாமிர்தம்**
101. தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணைநின்றவர் - – **மூவலூர் இராமாமிர்தம்**
102. தமிழக அரசு, 8ஆம் வகுப்புவரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை **மூவலூர் இராமாமிர்தம்** பெயரில் வழங்கிவருகிறது.
103. பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர் – **பண்டித ரமாபாய்**
104. தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர் – **ரமாபாய்**
105. பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில் மருத்துவரானவர் – **ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்**
106. தமிழகத்திற்கு வந்து வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர் – **ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்**
107. 1882இல் முதன் முதலில் பெண் கல்விக்கு பரிந்துரை செய்த குழு – **ஹண்டர் குழு**
108. முதன் முதலாகப் பெண்களுக்கான பள்ளியை தொடங்கியவர்கள் – ஜோதிராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே (மராட்டிய மாநிலத்தில்)
109. இந்தியாவில் ‘குழந்தை பாதுகாப்போம்’ என்ற அமைப்பை நிறுவியவர் – **கைலாஷ் சத்யார்த்தி**
110. 2014இல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் – **கைலாஷ் சத்தியார்த்தி**
111. பாகிஸ்தானில் பெண்கல்வி வேண்டுமெனப் போராடியவர் – **மலாலா**
112. ஈ. வெ. ரா. நாகம்மை இலவசக் கல்வி உதவி திட்டம் - **ஏழை மாணவிகள் பட்டமேற்படிப்பு**
113. சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம் – **கல்வி, திருமண உதவித்தொகை**
114. தனித் தமிழில் சிறந்த பெண்மணி – **நீலாம்பிகை அம்மையார்**
115. மறைமலையடிகளின் மகள் – **நீலாம்பிகை அம்மையார்**
116. 1964இல் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்திய குழு – **கோத்தாரி கல்விக் குழு**
117. குழந்தைத் திருமணத்தைத் தடுக்க 1929இல் கொண்டுவரப்பட்ட சட்டம் – **சாரதா சட்டம்**
118. சூரியன், பரமாணுப் புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியவர் – **ஈ. த. இராஜேஸ்வரி அம்மையார்**
119. இராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியராகப் பணியாற்றியவர் – **ஈ. த. இராஜேஸ்வரி**

**குடும்ப விளக்கு**

120. பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, தமிழியக்கம் ஆகிய நூல்களின் ஆசிரியர் – **பாரதிதாசன்**
121. பாரதிதாசனின் கவிதைத் தொகுப்பு – **பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்**
122. பாரதிதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் – **பிசிராந்தையார்**
123. “பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்” – **பாரதியார்**
124. “மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா”, – **கவிமணி**
125. “பெண் எனில் பேதை என்ற எண்ணம் இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும் உருப்படல் என்பது சரிப்படாது”, – **பாவேந்தர் பாரதிதாசன்**
126. குடும்ப விளக்கு - குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதை உணர்த்துகிறது; கற்ற பெண்ணின் குடும்பமே பல்கலைக்கழகமாக மிளிரும் என்பதைக் காட்டுகிறது;
127. “வானூர்தி செலுத்தல் வைய மாக்கடல் முழுதும் அளத்தல்”, – **பாரதிதாசன்**

### சிறுபஞ்சமூலம்

128. தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து தோன்றியது – **நீதி நூல்கள்**
129. சிறுபஞ்சமூலம் என்பதன் பொருள் – **ஐந்து சிறிய வேர்கள்**
130. கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி – **சிறுபஞ்சமூலம்.** இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது.
131. அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன.
132. **சிறுபஞ்சமூல** பாடல்கள் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.
133. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் – **காரியாசான்**
134. காரியாசானின் இயற்பெயர் – **காரி**
135. மாக்காரியாசான் என்று காரியாசானை சிறப்பிப்பது – **பாயிரச் செய்யுள்**
136. பத்து வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும், பாடவும் ஆற்றல் பெற்றவர் – **வள்ளலார்**
137. 11ஆவது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும் பட்டம் பெற்றவர் - **பாரதியார்**
138. 15ஆவது வயதிலேயே பிரஞ்சு இலக்கியக் கழகத்துக்கு தமது கவிதைகளை எழுதி அனுப்பியவர் – **விக்டர் ஹியூகோ**
139. 16ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப்படையில தளபதியானவர் – **மாவீரன் அலெக்சாண்டர்**
140. 17 வயதில் பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் – **கலீலியோ**

### வீட்டிற்கோர் புத்தகசாலை

141. “நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்” என்றவர் – **ஆபிரகாம் லிங்கன்**
142. மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்துவது சிரிப்பு மட்டுமன்று, சிந்திப்பதும்தான். சிந்தனையைத் தூண்டுவது கற்றல் மட்டுமன்று, நூல்களும்தான்.
143. நடுவண் அரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயம் வெளியிட்ட ஆண்டு – **2009**
144. தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கிய ஆண்டு – **2010**
145. ‘தென்னகத்தின் பெர்னாட்ஷா’ என்று அழைக்கப்படுபவர் – **அறிஞர் அண்ணா**
146. ‘சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்’ முதல் ‘இன்ப ஒளி’ வரை பல படைப்புகளைத் தந்தவர் – **அறிஞர் அண்ணா**
147. தம்முடைய திராவிடச் சீர்திருத்தக் கருத்துகளை நாடகங்கள், திரைப்படங்கள் மூலமாக முதன்முதலில் பரப்பியவர் - **அறிஞர் அண்ணா**
148. பேரறிஞர் அண்ணா துணையாசிரியராக பணியாற்றிய இதழ்கள் – **குடியரசு, விடுதலை**
149. பேரறிஞர் அண்ணா பெத்த நாயக்கன் பேட்டை கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றிய ஆண்டு – **1935**
150. அறிஞர் அண்ணா ஆசிரியராக பணியாற்றிய இதழ்கள் – **ஹோம்ரூல், ஹோம்லேண்ட், நம்நாடு, திராவிடநாடு, மாலைமணி, காஞ்சி**
151. இரு மொழி சட்டத்தை உருவாக்கியவர் – **அறிஞர் அண்ணா**
152. சென்னை மாகாணத்தைத் ‘தமிழ்நாடு’ என்று மாற்றியவர் – **அறிஞர் அண்ணா**
153. ஆசியாவிலேயே மிகப்பழமையான நூலகம் – **தஞ்சை சரசுவதி மகால்**
154. உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் – **சென்னை கன்னிமாரா நூலகம்**
155. இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் – **திருவனந்தபுரம் நடுவண் நூலகம்**
156. இந்தியாவின் மிகப்பெரிய நூலகம் – **கொல்கத்தா தேசிய நூலகம்**
157. உலகின் மிகப்பெரிய நூலகம் – **லைப்ரரி ஆப் காங்கிரஸ் (அமெரிக்கா)**
158. தமிழ், ஆங்கிலத்தில் மிகச் சிறந்த பேச்சாளர் – **அறிஞர்அண்ணா**

### அண்ணாவின் புகழ் பெற்ற பொன்மொழிகள்

159. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.
160. கத்தியைத் தீட்டாதே உன்றன் புத்தியைத் தீட்டு. வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தி ஆகும்.
161. சட்டம் ஒரு இருட்டறை-அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு.
162. தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியம் தேவை.
163. இளைஞர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதையும் தேவை.
164. இளைஞர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்.
165. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.
166. நல்ல வரலாறுகளைப் படித்தால்தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.
167. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.

### இடைச்சொல் – உரிச்சொல்

168. பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் ஆகியவற்றைப்போல இடைச்சொற்கள் தமிழில் மிகுதியாக இல்லை. ஆயினும், இடைச் சொற்களே மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.

169. இடைச்சொற்கள், பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன; தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.

170. இடைச்சொல் பலவகையாக அமையும்.

171. **வேற்றுமை உருபுகள் -** ஐ, ஆல், கு, இன், அது, கண்

172. **பன்மை விகுதிகள்** - கள், மார்

173. **திணை, பால் விகுதிகள் -** ஏன், ஓம், ஆய், ஈர்(கள்), ஆன், ஆள், ஆர், ஆர்கள், து, அ

174. **கால இடைநிலைகள் -** கிறு, கின்று, ...

175. **பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் -** அ, உ, இ, மல், ...

176. **எதிர்மறை இடைநிலைகள் -** ஆ, அல், இல்

177. **தொழிற்பெயர் விகுதிகள் -** தல், அம், மை

178. **வியங்கோள் விகுதிகள் -** க, இய

179. **சாரியைகள் -** அத்து, அற்று, அம், ...

180. **உவம உருபுகள் -** போல, மாதிரி

181. **இணைப்பிடைச் சொற்கள் -** உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும், ...

182. **தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் –** உம், ஓ, ஏ, தான் மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம்

183. இடைச்சொல்லுருபுகள் – **மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை**

184. இடைவினா உறுபுகள் – **ஆ, ஓ**

185. '**உம்**' என்னும் **இடைச்சொல்** எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் ஆகிய **எட்டுப்** பொருள்களில் வரும்.

186. "மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை" என்பது – **எதிர்மறை உம்மை**(உம்)

187. பாடகர்களும் போற்றும் பாடகர் என்பது – **உயர்வு சிறப்பும்மை**(உம்)

188. **ஓகார இடைச்சொல்** ஒழியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய **எட்டுப் பொருளில் வரும் என்று நன்னூல்** கூறுகிறது.

189. இன்றைக்கு மழை பெய்யுமோ? – **ஐயம் (ஓ)**

190. பூங்கொடியோ மலர்க்கொடியோ பேசுங்கள் - **இது அல்லது அது (ஓ)**

191. பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள் - **இதுவும் இல்லை – அதுவும் இல்லை (ஓ)**

192. **ஏகார இடைச்சொல்** பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய **ஆறு பொருள்களில்** வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

193. தற்காலத்தில் **ஏகாரம் தேற்றப்** பொருளில் (**அழுத்தம்**) மட்டுமே வருகிறது.

194. **'தான்'** என்னும் **இடைச்சொல்லும் அழுத்தப்** பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை **முதன்மைப்படுத்துகின்றது**. ஒரு **சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே** வருகிறது.

195. **'மட்டும்' இடைச்சொல்** வரையறைப் பொருள் தருகிறது. முடிந்தவரை, குறிப்பிட்ட நேரம் வரை என்னும் பொருள்களிலும் வருகிறது.

196. **'ஆவது'** பல பொருள்களில் வரும் இடைச்சொல்லாகும்.

197. '**ஆ**' வினாப் பொருளில் வரும் இடைச்சொல்லாகும்.

198. '**ஆ**' என்னும் இடைச்சொல், சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ, அச்சொல் வினாவாகிறது.

199. ஐந்து பேராவது வாருங்கள் - **ஆவது** (குறைந்த அளவு)

200. தெருவில் ஒருவர்கூட நடமாடவில்லை - **கூட** (முற்றுப் பொருள்)

201. '**ஆம்**' சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.

202. உள்ளே வரலாம் - **ஆம்** (இசைவு)

203. இது பழம் அன்று என்பது – **ஒருமைக்குரிய** எடுத்துக்காட்டு.

204. இவை பழங்கள் அல்ல என்பது– **பன்மைக்குரிய** எடுத்துக்காட்டு.

205. எத்தனை என்பது – **எண்ணிக்கையைக் குறிப்பது**

206. எத்துணை என்பது – **அளவையும், காலத்தையும் குறிப்பது**

207. **உரிச்சொற்கள்** பெயர்களையும் வினைகளையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன. உரிச்சொல் **இசை, குறிப்பு, பண்பு** என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும்.

208. உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையவை. ஆனால் இவை தனித்து வழங்கப்படுவதில்லை. உரிச் சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று நன்னூலார் கூறுகிறார்.

## ஒரு சொல் பல பொருளுக்கு உரியது

209. கடி மலர் - மணம் மிக்க மலர்

210. கடி நகர் – காவல் மிக்க நகர்

211. கடி விடுதும் – விரைவாக விடுவோம்

212. கடி நுனி – கூர்மையான நுனி

213. பல சொல் ஒரு பொருள் தருவது - உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன.

214. மழ, குழ என்பவற்றிலிருந்து உருவானவை மழலை, குழந்தை போன்ற சொற்கள். உவப்பு (உவகை), பசப்பு (நிறம் மங்குதல்), பயப்பு (பயன்) போன்றவை அப்படியே பயன்படுகின்றன.

215. செழுமை என்பது செழிப்பு, செழித்த, செழிக்கும் எனப் பெயராகவும், வினையாகவும் பயன்படுகிறது. விழுமம் என்பது விழுப்பம், விழுமுதல், விழுமிய எனப் பெயராகவும் வினையாகவும் பயன்படுகிறது.

216. 'ஓய்ந்திருக்கலாகாது' நூலின் ஆசிரியர் – கல்விச் சிறுகதைகள் (தொகுப்பு: அரசி -ஆதிவள்ளியப்பன்)

217. 'முதல் ஆசிரியர்' நூலின் ஆசிரியர் – சிங்கிஸ் ஐத்மாத்தவ்

218. 'கல்வியில் நாடகம்' நூலின் ஆசிரியர் – பிரளயன்

219. 'கரும்பலகை யுத்தம்' நூலின் ஆசிரியர் - மலாலா

**சிற்பக்கலை**

220. "ஓவிய விதானத்து, உரைபெறு நித்திலத்து மலைத்தாமம் வளையுடன் நாற்றி, விருந்துபடக் கிடந்த அருந்தொழில் அரங்கம்" – **சிலப்பதிகாரம்**

221. "கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும் மண்ணும் சிதையும் தந்தமும் வண்ணமும்" என்ற வரி இடம்பெற்ற நூல் – **திவாகர நிகண்டு, மணிமேகலையிலும் இத்தகு குறிப்புகள் காணப்படுகின்றன**

222. சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும், மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பங்கள் வடிப்பவர்கள் – **கற்கவிஞர்கள்**

223. தமிழின் இலக்கண தொன்மையான நூலாகிய தொல்காப்பியத்தில் சிற்பக்கலை பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

224. **தொல்காப்பியம்** - போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். தமிழரின் தொடக்ககாலச் சிற்பக்கலைக்குச் சான்றாக இதையும் குறிப்பிடலாம்.

225. **சிலப்பதிகாரத்தில்** கண்ணகிக்குச் சிலைவடித்த செய்தி இடம் பெற்றுள்ளது.

226. மாளிகைகளில் பல சிற்பங்களில் சுண்ணாம்புக் கலவை (சுதைச் சிற்பங்கள்) இருந்ததை **மணிமேகலை** மூலம் அறிய முடிகிறது.

227. பல்லவர்கால சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டு – **மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி மலைக்கோட்டை, காஞ்சி கைலாசநாதர் கோவில், காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவில், சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்**

228. பாண்டியர் கால குகைக் கோவில், சிற்ப வேலைப்பாடுகளுக்கு எடுத்துக்காட்டு – **திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம், கோவில்பட்டிக்கு மேற்கே கழுகுமலை வெட்டுவான்கோவில் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்**

229. 125 ஆண்டுகால மிகப் பழமையான சந்தை – **கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி**

230. சிற்பங்களின் வகைகள் – **2 (முழு உருவச் சிற்பம், புடைப்புச் சிற்பம்)**

**சோழர்காலச் சிற்பங்களுக்கு எ.கா**

231. முதலாம் இராசராச சோழன் – தஞ்சை பெரிய கோவில்

232. முதலாம் இராசேந்திர சோழன் – கங்கை கொண்ட சோழபுரம் ஒரே கல்லில் அமைந்த நவக்கிரகமும் சிங்கமுகக் கிணறும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்களும் குறிப்பிடத்தக்கன.

233. இரண்டாம் இராசராசன் – தாராசுரம் ஐராவதீசுவர்

234. இரண்டாம் குலோத்துங்கச் சோழன் – திரிபுவன வீரேசுவரம் கோயில்

235. இரண்டாம் பராந்தகச் சோழன் – மூவர் கோவில் சிற்பங்கள்

236. புதுக்கோட்டை மாவட்டம் - நார்த்தாமலையில் நடன முத்திரைகளுடன் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

237. திருச்சிராப்பள்ளி மாவட்டம் - சீனிவாசநல்லூரில் உள்ள குரங்கநாதர் கோவில் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை

238. திருவரங்கக் கோவிலினுள் அமைக்கப்பட்ட சிற்பங்களில் வெளிப்படும் முக பாவனைகள் சோழர்காலச் சிற்பக்கலை நுட்பத்திற்கு மிகச்சிறந்த சான்றுகளாகும்.

239. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என்று அழைக்கப்படுவது – **சோழர் காலம்**

240. தமிழ்நாடு அரசு சிற்பக்கல்லூரி அமைந்துள்ள இடம் – **மாமல்லபுரம்**

241. சுவாமிமலை, கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களில் உலோகப் படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன.

242. சென்னையிலும் கும்பகோணத்திலும் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகளில் சிற்பக்கலையைப் பயிலலாம்.

243. சிற்பக்கலை குறித்த செய்திகளை அனைவரும் அறிந்து கொள்ள தமிழ்நாடு தொழில்நுட்பக்கல்வி இயக்கம் வெளியிட்ட நூல் – **சிற்பச்செந்நூல்**

**விஜயநகர மன்னர் காலச் சிற்பங்கள்**

244. **விஜ**யநகர மன்னர்கள் காலத்தில் கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்கள் எழுப்பப்பட்டன

245. அக்கோபுரங்களில் சுதைகளாலான சிற்பங்கள் மிகுதியாக உள்ளன.

246. இவர்கள் தெலுங்கு, கன்னடப்பகுதிகளுடன் தொடர்புகொண்டிருந்த காரணத்தால் அந்நாட்டுச் சிற்பக் கலையின் தாக்கம் தமிழகச் சிற்பங்களில் ஏற்பட்டது.

247. குதிரையின் உருவங்களைச் சிற்பங்களில் இடம் பெறச் செய்தவர்கள் – **விஜயநகர மன்னர் காலச் சிற்பிகள்**

**நாயக்கர் காலச் சிற்பங்கள்**

248. நாயக்க மன்னர் பல இடங்களில் ஆயிரங்கால் மண்டபங்களை அமைத்தனர்.

**249.** மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேசுவரம் பெருங்கோவில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், கிருஷ்ணாபுரம் பெருமாள் கோவில், திண்டுக்கல் அருகே தாடிக்கொம்பில் உள்ள பெருமாள் கோவில், பேரூர் சிவன் கோவில் போன்ற இடங்களில் கலைநயம் மிக்க சிற்பங்களைக் காணமுடியும்.

**250.** மதுரை மீனாட்சி அம்மன் கோயில் ஆயிரம் கால் மண்டபத்து தூண்களில் காணப்படும் சிற்பங்கள் – **கண்ணப்பர், குறவன், குறத்தி, இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி நிற்கும் சந்திரமதி சிலையும் அமைந்துள்ளது.**

**251.** நாயக்கர் காலச் சிற்பக் கலை நுட்பத்தின் உச்ச நிலை – **பேரூர் சிவன் கோவில்**

**252.** **கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி** கோவிலில் உள்ள குறவன் குறத்தி, இரதிதேவி சிலைகள் காண்போரை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

### பௌத்த சிற்பங்கள்

**253.** பௌத்த மதத்தைத் தழுவிய தமிழர்கள், புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த (கிடை) நிலைகளில் சிற்பங்களாகப் படைத்து வழிபட்டனர்

### சமணச் சிற்பங்கள்

**254.** ஒரு பாறையில் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களின் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ள இடம் – விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு அண்மையில் உள்ள **திருநாதர்குன்று**

**255.** சமண மதத்தில் சில சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும், பருமனும் உடையனவாக உள்ளன.

### நாச்சியார் திருமொழி

**256.** ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு – **நாலாயிர திவ்வியப்பிரபந்தம்**

**257.** நாச்சியார் திருமொழியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை – **143**

**258.** திருமாலை வழிபட்டுச் சிறப்புநிலை எய்திய ஆழ்வார்கள் பன்னிருவர். அவருள் ஆண்டாள் மட்டுமே பெண்.

**259.** இறைவனுக்குப் பாமாலை சூட்டியதோடு தான் அணிந்து மகிழ்ந்த பூமாலையையும் சூட்டியதால், "சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என அழைக்கப்பெற்றார்.

**260.** பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் – **ஆண்டாள்**

**261.** ஆண்டாள் பாடியதாகத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு தொகுதிகள் உள்ளன.

**262.** "கதிரொளி தீபம் கலசம் உடனேந்தி
சதிரிள மங்கையர் தாம்வந்து எதிர்கொள்ள", - நாச்சியார் திருமொழி - ஆண்டாள்

**<u>பொருள் தருக:</u>**

**263.** தீபம் – விளக்கு

**264.** சதிர் – நடனம்

**265.** தாமம் – மாலை

**266.** இலக்கணக் குறிப்பு: **முத்துடைத்தாமம் - இரண்டாம் வேற்றுமைத் தொகை**

### செய்தி

**267.** தஞ்சை மண்வாசனையுடன் கதைகளைப் படைத்தவர் – **தி. ஜானகிராமன்**

**268.** வடமொழி அறிவும் சிறந்த இசையறிவும் கொண்ட **தி. ஜானகிராமன்** கதைகள் மணிக்கொடி, கிராம ஊழியன், கணையாழி, கலைமகள், சுதேசமித்திரன், ஆனந்த விகடன், கல்கி போன்ற இதழ்களில் வெளிவந்தன

**269.** "அவரவர் அனுபவிப்பதும் எழுத்தாக வடிப்பதும் அவரவர் முறை" என்னும் கோட்பாட்டைக் கொண்டவர் – **தி. ஜானகிராமன்**

**270.** தி. ஜானகிராமன் எழுதிய 'செய்தி' என்னும் சிறுகதை **சிவப்பு ரிக்க்ஷா** தொகுப்பில் இடம்பெற்றது.

**271.** நாகசுரம் கருவி **ஆச்சா** மரத்திலிருந்து செய்யப்படுகிறது.

**272.** நாகசுரத்தின் மேல்பகுதியில் ***சீவாளி*** என்ற கருவி பொருத்தப்படுகிறது

**273.** சீவாளி என்பது – **நாணல் என்ற புல் வகையைக் கொண்டு செய்யப்படுகிறது.**

**274.** நாகசுரம் 600 ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழகத்தில் வாசிக்கப்பட்டது.

**275.** 13ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்கீத இரத்னாகரம் என்னும் நூலில் நாகசுரக் கருவி பற்றிக் கூறப்படவில்லை.

**276.** தஞ்சாவூர் தமிழுக்கு அளித்த கொடை உ.வே. சாமிநாதர், மௌனி, தி. ஜானகிராமன், தஞ்சை பிரகாஷ், தஞ்சை இராமையா தாஸ், தஞ்சாவூர்க் கவிராயர் ஆகியோர்

**277.** தி. ஜானகிராமன் அவர்கள் தனது ஜப்பான் பயண அனுபவங்களை எழுதிய தலைப்பு – **உதயசூரியன் (1967); இதழ் – சுதேசமித்திரன்**

**278.** தி. ஜானகிராமன் செக்கோஸ்லோவோக்கியா சென்ற அனுபவங்களை எழுதிய தலைப்பு – **கருங்கடலும் கலைக்கடலும் (1974)**

**279.** தி. ஜானகிராமன் தமது காவிரிகரைப் பயணத்தை எழுதிய தலைப்பு – **நடந்தாய் வாழி காவேரி**

**280.** ஜானகிராமனின் பயணக்கட்டுரை – **அடுத்த வீடு ஐம்பது மைல்**

**281.** 1970இல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'அன்பளிப்பு' என்ற நூலின் ஆசிரியர் – **கு. அழகிரிசாமி**

**282.** 1979இல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'சக்தி வைத்தியம்' என்ற நூலின் ஆசிரியர் – **தி. ஜானகிராமன்**

**283.** 1987இல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'முதலில் இரவு வரும்' என்ற நூலின் ஆசிரியர் – **ஆதவன்**

**284.** 1996இல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'அப்பாவின் சிநேகிதர்' என்ற நூலின் ஆசிரியர் – **அசோகமித்ரன்**

285. 2008இல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'மின்சாரப்பூ' என்ற நூலின் ஆசிரியர் – **மேலாண்மை பொன்னுசாமி**

286. 2010இல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'சூடிய பூ சூடற்க' என்ற நூலின் ஆசிரியர் – **நாஞ்சில் நாடன்**

287. 2016இல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'ஒரு சிறு இசை' என்ற நூலின் ஆசிரியர் – **வண்ணதாசன்**

**புணர்ச்சி**

288. எழுத்து வகையால் சொற்கள் **4** வகைப்படும்.

289. கலை + அழகு - உயிரீறு

290. மண் + குடம் - மெய்யீறு

291. வாழை + இலை - உயிர்முதல்

292. வாழை + மரம் – மெய்ம்முதல்

293. இப்புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.

294. உயிர்முன் உயிர் - மணி (ண்+இ) + அடி = மணியடி

295. உயிர்முன் மெய் - பனி + காற்று = பனிக்காற்று

296. மெய்ம்முன் உயிர் - ஆல் + இலை = ஆலிலை

297. மெய்ம்முன் மெய் - மரம் + (க்+இ) கிளை = மரக்கிளை

298. நிலை மொழியில் இ, ஈ, ஐ, யும் வரும் மொழியின் முதலில் உயிரெழுத்தும் சேரும் போது – **யகரம் உடம்படு மெய்யாக வரும்**

299. 'இ, ஈ, ஐ' தவிர, பிற உயிரெழுத்துகள் நிலைமொழி ஈறாக வரும்போது அவற்றின்முன் வருமொழியில் பன்னிரண்டு உயிர்களும் வந்து புணர்கையில் - **வகர மெய் தோன்றும்**.

300. வருமொழியில் பன்னிரண்டு உயிரெழுத்துகளையும் உடைய சொற்கள் வந்து, நிலைமொழி ஈறாக ஏகாரம் வந்தால் – **யகரமோ, வகரமோ தோன்றும்**

301. உடம்படு மெய்யெழுத்துக்கள் – **ய், வ்**

302. மணி + அடி = **மணியடி – உடம்படுமெய்**

303. குரு + அருள்= **குருவருள் – உடம்படுமெய்**

304. தே + இலை = **தேயிலை – உடம்படுமெய்**

305. தே + ஆரம் = **தேவாரம் – உடம்படுமெய்**

306. எனது + உயிர் = **எனதுயிர் – குற்றியலுகரப் புணர்ச்சி**

307. நாடு + யாது = **நாடியாது – குற்றியலுகரப் புணர்ச்சி**

308. நிலவு + ஒளி = **நிலவொளி – குற்றியலுகரப் புணர்ச்சி**

309. குற்றிலுகரம் ஆறு வகைப்படும்.

310. குற்றியலுகர எழுத்துக்கள் - **ஆறு**

311. எஃகு, அஃது என்பது – **ஆய்தத் தொடர் குற்றியலுகரம்**

312. உயிர்த் தொடர் குற்றியலுகரம் – **முதுகு, வரலாறு**

313. புணர்ச்சியில் இரு சொற்கள் இணையும்போது வருமொழியில் க, ச, த, ப வந்தால் சில இடங்களில் மீண்டும் அதே எழுத்துத் தோன்றும். இதை' **வலி மிகுதல்**' என்பர்.

314. சில இடங்களில் **மெல்லினமும் மிகுதல்** உண்டு. குறிப்பாக, ங, ஞ, ந, ம என்ற நான்கு எழுத்துகளும் இவ்வாறு மிகும்.

315. 'ய' கர ஈற்றுச் சொற்கள் முன் – **மெல்லினம் மிகும்.** எ.கா: மெய்+மயக்கம்=மெய்ம்மயக்கம், மெய்+ஞானம்=மெய்ஞ்ஞானம்

316. வேற்றுநிலை மெய் மயக்கத்தில் ய, ர, ழ முன்னர் – **மெல்லினம் மிகும்** எ.கா: **வேய்+குழல்=வேய்ங்குழல், கூர்+சிறை=கூர்ஞ்சிறை**

317. 'புளி' என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமின்றி – **மெல்லினமும் மிகும்.** எ.கா: **புளி+கறி=புளிங்கறி புளி+சோறு=புளிஞ்சோறு**

318. உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப் பெயர்களுக்கு முன் – **மெல்லினம் மிகும்.** எ.கா: மா + பழம் – மாம்பழம், விள + காய் – விளங்காய்

319. 'பூ' என்னும் பெயர் முன் வல்லினத்தோடு – **மெல்லினமும் மிகும்**

எ.கா: பூ + கொடி – பூங்கொடி, பூ + சோலை – பூஞ்சோலை

320. "எத்தனை பெரிய வானம்!
எண்ணிப்பார் உனையும் நீயே;
பித்தேறி மேல்கீழ் என்று
மக்கள்தாம் பேசல் என்னே!", - **பாவேந்தர் பாரதிதாசன்**

**இராவண காவியம்**

321. "இராவண காவியம் காலத்தின் விளைவு, ஆராய்ச்சியின் அறிகுறி, புரட்சிப் பொறி, உண்மையை உணர வைக்கும் உன்னத நூல்" என்று கூறியவர் – **பேரறிஞர் அண்ணா**

322. கோப்பு, கோவை, கோத்தல், கோத்தான், கோத்தார் என்பதன் வேர்ச்சொல் – **கோ**

323. 20ஆம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் – **இராவண காவியம்**

324. இராவண காவியத்தில் உள்ள காண்டங்கள் – **ஐந்து**

325. இராவண காவியத்தில் உள்ள பாடல்கள் – **3100**

326. இராவண காவியத்தின் ஆசிரியர் – **புலவர் குழந்தை**

327. தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாட்களில் திருக்குறளுக்கு உரை எழுதியவர் – **புலவர் குழந்தை**

328. இராவண காவியத்தில் உள்ள காண்டங்கள் –**தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க் காண்டம்,**

329. யாப்பதிகாரம், தொடையதிகாரம் ஆகியவற்றின் ஆசிரியர் – **புலவர் குழந்தை**

330. இராவண காவியத்தின் நாயகன் – **இராவணன்**

**பொருள் தருக:**

331. மைவனம் மலைநெல்

332. முருகியம்- குறிஞ்சிப்பறை

333. சிறை- இறகு

334. பூவை- நாகணவாய்ப் பறவை
335. பொலம்- அழகு
336. கடறு- காடு
337. பொலி- தானியக்குவியல்
338. உழை- ஒரு வகை மான்
339. வாய்வெரீஇ- சோர்வால் வாய் குழறுதல்
340. குருளை- குட்டி
341. இனைந்து- துன்புறுதல்
342. உயங்குதல்- வருந்துதல்.
343. படிக்குஉற- நிலத்தில் விழ
344. கோடு- கொம்பு
345. கல்-மலை
346. முருகு- தேன், மணம், அழகு
347. மல்லல்- வளம்
348. செறு- வயல்
349. கரிக்குருத்து- யானைத்தந்தம்
350. போர்- வைக்கோற்போர்
351. புரைதப- குற்றமின்றி
352. தும்பி- ஒருவகை வண்டு
353. துவரை-பவளம்
354. மரை- தாமரை மலர்
355. மதியம்-நிலவு
356. ‘நட்புக்காலம்’ என்ற நூலின் ஆசிரியர் – **கவிஞர் அறிவுமதி**
357. ‘திருக்குறள் கதைகள்’ என்ற நூலின் ஆசிரியர் – **கிருபானந்த வாரியார்**
358. ‘கையா, உலகே ஒரு உயிர்’ என்ற நூலின் ஆசிரியர் – **ஜேம்ஸ் லவ்லாக்** (தமிழில்) – **சா. சுரேஷ்**

## திருக்குறள்

359. **ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர் போஓம்**
**அளவும் ஓர்நோய்.**
**பொருள்:** சொன்னாலும் செய்யாமல், தானாகவும் செய்யாமல் இருப்பவன் உயிர், சாகும்வரை உள்ள நோய்!

360. “**அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்**”
**பொருள்:** ஒழுக்கமான குடியில் பிறந்தவர், தவறு செய்வதில்லை. கோடிப் பொருள் அடுக்கிக் கொடுத்தாலும்,

361. “**அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்**”
**பொருள்:** பிறரிடம் அன்பும் பழிக்கு நாணுதலும் சமத்துவ எண்ணமும் இரக்கமும் உண்மையும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்!
**அணி** - ஏகதேச உரு வக அணி

362. “**ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)**
**ஆழி எனப்படு வார்**”
**பொருள்:** ஊழிக்காலம் வந்தாலும் சான்றாண்மை என்னும் கடலுக்குக் கரை போன்றவர் நற்பண்புகளிலிருந்து மாறமாட்டார்.
**அணி** - ஏகதேச உருவக அணி

363. “**உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃதாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து**”
**பொருள்:** மற்ற தொழில் செய்பவரையும் உழுபவரே தாங்கி நிற்பதால், அவரே உலகத்துக்கு அச்சாணி ஆவர்.
**அணி** - ஏகதேச உருவக அணி

## 9ஆம் வகுப்பு – பழைய புத்தகம்
## 9ஆம் வகுப்பு இரண்டாம் பருவம் இயல் 1

### இன்பம்

1. “பழந்தமிழ் கற்றல் இன்பம் பல நாடு சுற்றல் இன்பம்” எனப் பாடியவர் – சுரதா
2. “கற்றவர் முன் தாம் கற்ற கல்வியை கூறல் இன்பம்” எனப் பாடியவர் – சுரதா
3. சுரதாவின் இயற்பெயர் – இராசகோபாலன்
4. சுரதா பிறந்த ஊர் – திருவாரூர் மாவட்டம், பழையனூர்
5. சுரதா பிறந்த நாள் –23.11.1921
6. சுரதாவின் பெற்றோர் – திருவேங்கடம் -செண்பகம்
7. சுரதா பெற்ற தமிழக அரசின் விருது – பாவேந்தர் விருது
8. சுரதா பெற்ற தமிழக இயலிசை நாடக மன்றத்தின் விருது – கலைமாமணி
9. சுரதாவின் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்ற நூல் – தேன்மழை
10. சுரதா பாவேந்தர் பாரதிதாசன் மீது கொண்ட பற்றின் காரணமாக தம் பெயரை எப்படி மாற்றிக் கொண்டார்? சுப்புரத்தினதாசன்.
11. சுப்புரத்தினதாசனின் சுருக்கப் பெயர் – சுரதா
12. சுரதா எழுதிய கவிதை நூல்கள் – தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள்
13. ‘கயவர்’ என்பதன் பொருள் – கீழ்க்குணமுடையோர்
14. தேன்மழை நூலில் இயற்கை எழில் முதலாக ஆராய்ச்சி ஈறாக மொத்தம் 16 பகுதிகள் உள்ளன.

### பெருந்தலைவர் காமராசர்

15. காமராசர் பிறந்த ஊர் – விருதுநகர்
16. காமராசர் பெற்றோர் – குமாரசாமி -சிவகாமி
17. காமராசர் பிறந்த நாள் – 15 ஜூலை 1903
18. காமராசர் தம் அரசியலறிவை வளர்த்துக் கொண்ட இடம் – மெய்கண்டான் புத்தகசாலை

19. காமராசர் மெய்கண்டான் புத்தகசாலை எனும் நூல் நிலையத்திற்கு சென்று லெனின், கரிபால்டி, நெப்போலியன் வாழ்க்கை வரலாறுகளை படித்து திறமையாக வாதம் புரியத் தொடங்கினார்.
20. காமராசர் பதினோராண்டுகள் சிறையில் கழித்தார்
21. காமராசரின் அரசியல் குரு – சத்தியமூர்த்தி
22. காமராசர் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு – 1937
23. காமராசர் தமிழ்நாட்டு காங்கிரசு கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு – 1939
24. தலைவர்களை உருவாக்குபவர் என அழைக்கப்பட்டவர் – காமராசர்
25. தமிழ்நாட்டுக் காங்கிரசு கட்சியின் தலைவராக காமராசர் 12 ஆண்டுகள் பதவி வகித்தார்.
26. 1954இல் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியவர் - ராஜாஜி
27. காமராசர் தமிழ்நாட்டில் முதலமைச்சர் ஆன ஆண்டு – 1954
28. காமராசர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதவியிலிருந்து பதவி விலகிய ஆண்டு – 1963
29. ‘பெருந்தலைவர்’ என அழைக்கப்பட்டவர் – காமராசர்
30. கூட்டுறவு இயக்கம் காமராசர் காலத்தில் வேரூன்றியது.
31. காமராசர் ஆட்சி காலத்தில் தொழிலமைச்சராக இருந்தவர் – ஆர். வெங்கட்ராமன்
32. காமராசர் ஆட்சி காலத்தில் கல்வியமைச்சராக இருந்தவர் – சி. சுப்பிரமணியம்.
33. காமராசர் முதலமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாவது ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.
34. காமராசர் ஆட்சிக் காலத்தில் கிண்டி, அம்பத்தூர், இராணிப்பேட்டை தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டன.
35. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை, உதகை இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, கிண்டி அறுவைசிகிச்சைக் கருவித் தொழிற்சாலை, சருக்கரை ஆலை, சோடா உப்புத் தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை, பெரம்பூர்த் தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலை, மேட்டூர்க் காகிதத் தொழிற்சாலை முதலியன காமராசர் ஆட்சியில் தொடங்கப்பெற்றன
36. பள்ளி வேலை நாட்களை 180லிருந்து 200ஆக உயர்த்தியவர் – காமராசர்
37. காமராசர், ஈராண்டுகளில் நூற்று முப்பத்து மூன்று மாநாடுகள் கூட்டினார். இவ்வாறு கூட்டப்பட்ட மாநாடுகள் மூலம் பல கோடி ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகள் கிடைத்தன; உயர்நிலைப் பள்ளிவரை இலவசக் கல்வி கொண்டு வரப்பட்டது.
38. ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மேலும், உடற்பயிற்சிக் கல்லூரிகளும் ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் திறக்கப்பட்டன.
39. மருத்துவக் கல்லூரி முதலான தொழிற்கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடனளிக்க காமராசரால் ஏற்பாடு செய்யப்பட்டது.
40. தஞ்சாவூர்ப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்திச் சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு அறுபது விழுக்காடு பங்கு கிடைக்க வழிவகை செய்தார் காமராசர்.
41. நில உச்சவரம்பு முப்பது ஏக்கர் எனக் குறைக்கப்பட்டு நிலமுதலாளிகளிடமிருந்து உபரிநிலங்கள் பெறப்பட்டு நிலமில்லாதோருக்கு அவை பிரித்தளிக்கப்பட்டன.
42. மீனவர், கருப்புக்கட்டி காய்ச்சுபவர், கைத்தறியாளர், குயவர் முதலிய சிறுதொழிலாளர் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் நலத்திட்டங்களில் ஓய்வூதியம் குறிப்பிடத்தக்கது. நகர்ப்புற வீடுகட்டும் திட்டம், இலவச மருத்துவவசதி முதலியனவும் இவரால் அமைத்துக் கொடுக்கப்பட்டன.
43. தமிழ்நாட்டின் முதல் அமைச்சர்களாக பணியாற்றியவர்கள்: 1945 – பிரகாசம்,1947 – ஓமந்தூர் ராமசாமி, 1949 – குமாரசாமி
44. சீன படையெடுப்புக்குப்பின் காங்கிரசுக் கட்சியின் செல்வாக்கு சரியத் தொடங்கியது.
45. சீனப்படையெடுப்பு நடைபெற்ற ஆண்டு – 1962
46. காமராசர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகப் பதவியேற்ற ஆண்டு – 1963
47. 1963ஆம் ஆண்டு காங்கிரசு மாநாடு புவனேசுவரில் நடைபெற்றது.
48. இந்தியப் பிரதமர் நேரு காலமான ஆண்டு – 1964
49. லால்பகதூர் சாஸ்திரி தாஸ்கண்டில் காலமான ஆண்டு – 1966
50. சாஸ்திரியை போட்டியின்றி பிரதமராக தேர்ந்தெடுக்க வழிவகை செய்தவர் – காமராசர்
51. காமராசர் பல்கலைக்கழகம் மதுரையில் உள்ளது.
52. காமராசருக்கு மணிமண்டபம் கன்னியாகுமரியில் கட்டப்பட்டுள்ளது.
53. லால்பகதூர் சாஸ்திரிக்குப் பிறகு பிரதமர் ஆனவர் – இந்திரா காந்தி
54. காமரசார் அரங்கம் தேனாம்பேட்டையில் நிறுவப்பட்டது.
55. காமராசர் பிறந்த ஜூலை 15ஆம் நாளை தமிழ்நாடு அரசு கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துள்ளது.
56. ‘கல்விக் கண் திறந்தவர்’ எனப் போற்றப்படுபவர் – காமராசர்
57. காமராசர் இறந்த ஆண்டு – 2 அக்டோபர் 1975
58. நடுவணரசு காமராசருக்கு அளித்த விருது – பாரதரத்னா

**மு .வரதராசனாரின் கடிதம்**

59. "தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்தவல்லது; தமிழ் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவுமானால் தவிரத் தமிழுக்கு எதிர்காலம் இல்லை என நம்பு. ஆட்சிமொழி என்றால் சட்டசபைமுதல் நீதிமன்றம்வரையில் தமிழ் வழங்க வேண்டும்" என்று கூறியவர் – மு. வரதராசனார்

60. "உன் மொழியையும் நாட்டையும் போற்றுவதற்காக மற்றவர்களின் மொழியையும் நாட்டையும் தூற்றாதே, பழிக்காதே, வெறுக்காதே" என்று கூறியவர் – மு. வரதராசனார்

61. "தமிழர்களிடையே உள்ள பகை, பிரிவுகளை மேலும் வளர்க்கும் செயல்களைச் செய்யாதே; அத்தகைய சொற்களைச் சொல்லாதே; அவ்வாறான எண்ணங்களை எண்ணாதே. தமிழரிடையே ஒற்றுமை வளர்க்கும் சிந்தை, சொல், செயல்களையே போற்று. **சுவையாக இருந்தாலும் முன்னவையை நாடாதே. சுவையற்றிருந்தாலும் பின்னவையைப் போற்று**" என்று கூறியவர் – மு. வரதராசனார்

62. "ஏழை என்றும் அடிமை என்றும் இல்லை" என்று கூறியவர் – **பாரதியார்**

63. "தலைமை உன்னைத் தேடிக்கொண்டு வந்தால் வரட்டும். நீ அதைத் தேடிக் கொண்டுபோய் அலையாதே. நீ தேட வேண்டுவது தொண்டு" என்று கூறியவர் – மு. வரதராசனார்

64. 'தொண்டுக்கு முந்து, தலைமைக்குப் பிந்து' என்பது உன் நெறியாக இருக்கட்டும் என்று கூறியவர் – மு. வரதராசனார்

65. "இந்த நாட்டில் சொன்னபடி செய்ய ஆள் இல்லை. ஆனால், கண்டபடி சொல்ல ஆள் ஏராளம். ஒவ்வொருவரும் ஆணை இடுவதற்கு விரும்புகிறார். **அடக்கி ஒழுகுவதற்கு யாரும் இல்லை. அதனால்தான் வீழ்ச்சி நேர்ந்தது**" என்று கூறியவர் – **விவேகானந்தர்**

66. **வினையாலணையும் பெயர்** - வினைமுற்று, வினையைக் குறிக்காமல் வினைசெய்தவரைக் குறிப்பது. இது வினைக்குரிய காலம் காட்டும்; பெயர்க்குரிய வேற்றுமை உருபுகளையும் பெற்று வரும். **பெற்றானை – இறந்தகாலம்**

**பண்புப் பெயர்**

67. பண்புப் பெயர் நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

68. செம்மை, வெண்மை, கருமை - **நிறப்பண்பு**

69. வட்டம், சதுரம், கூம்பு, செவ்வகம் - **வடிவப்பண்பு**

70. ஒன்று, அரை, கிலோமீட்டர் - **அளவுப்பண்பு**

71. காரம், புளிப்பு, இனிப்பு – **சுவைப்பண்பு**

72. **பண்புப் பெயர் விகுதிகள்** - மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், அர், பம், து என்பன பண்புப்பெயர் விகுதிகள்

**வழாநிலை**

73. இலக்கண முறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.

74. செல்வன் படித்தான். இத்தொடரில் செல்வன் என்னும் ஆண்பால் ஒருமைப்பெயர் படித்தான் என்னும் ஆண்பால் ஒருமை வினைமுற்றைக் கொண்டே முடிகிறது. எனவே, இது வழாநிலை எனப்படும். வழாநிலை அறுவகைப்படும்.

75. திணை வழாநிலை - செல்வி பாடினாள், மாடு வந்தது

76. பால் வழாநிலை - கண்ணன் வந்தான், நாய் ஓடியது

77. இட வழாநிலை - நான் வந்தேன், நீ வருவாய்

78. கால வழாநிலை -நாளை வருவேன், நேற்றுப் படித்தேன்

79. வினா வழாநிலை - தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?

80. விடை வழாநிலை - தமிழ்நாட்டின் தலைநகரம் எது? என்னும் வினாவுக்குச் சென்னை என விடையளித்தல்

**வழு**

81. இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும். வழு திணைவழு, பால்வழு, இடவழு, காலவழு, வினா வழு, விடைவழு, மரபுவழு என ஏழுவகைப்படும்.

82. திணைவழு - என் மாமா வந்தது.

83. பால்வழு - கண்ணகி வந்தான்

84. இடவழு - நாங்கள் வந்தார்கள்

85. கால வழு - கரிகாலன் நாளை வந்தான்

86. வினாவழு - முட்டையிட்டது சேவலா பெட்டையா?

87. விடைவழு - நாளை பள்ளி திறக்கப்படுமா?

88. மரபு வழு - நாய் கத்தும்

**வழுவமைதி**

89. இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதி ஆகும்.

90. உவகை (மகிழ்ச்சி), சிறப்பு, உயர்வு, உறுதி, சினம் காரணமாகத் திணைவழுவும் பால்வழுவும் காலவழுவும் வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

91. என் இலட்சுமி வந்துவிட்டாள் – திணைவழுவமைதி

92. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் - காலவழுவமைதி

## இயல் 2

### முத்தொள்ளாயிரம்

1. மூவேந்தர்கள் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்ட நூல் – முத்தொள்ளாயிரம்
2. இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை.
3. **புறத்திரட்டு** என்னும் நூல் வாயிலாக **நூற்றெட்டு வெண்பாவும்**, **பழைய உரை நூல்களில்** மேற்கோள்களாக **இருபத்திரண்டு வெண்பாவும்** கிடைத்துள்ளன.
4. மூவேந்தர்களின் ஆட்சிச்சிறப்பு, படைச்சிறப்பு, போர்த்திறன், கொடை முதலிய செய்திகளை இப்பாடல்கள் விளக்குகின்றன.
5. சிறந்த இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்த நூலாக முத்தொள்ளாயிரம் திகழ்கிறது
6. இதன் ஆசிரியர் பெயர் – தெரியவில்லை

<u>**பொருள் தருக:**</u>

7. மருப்பு - தந்தம்
8. ஊசி – எழுத்தாணி
9. மறம் - வீரம்
10. கனல் - நெருப்பு
11. திருத்தக்க - செல்வம் நிலைத்த
12. மொய்யிலை – நெருங்கியமைந்த லை
13. மாறன் - பாண்டிய மன்னன்
14. உய்ம்மின் - பிழைத்துக்கொள்ளுங்கள்
15. மல்லல் - வளமை
16. வள் – நெருக்கம்
17. விசும்பு – வானம்
18. "சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி
    ஈர்த்திட் டுயர்துலைதான் ஏறினான் – நேர்ந்த", - முத்தொள்ளாயிரம்.

### கலிங்கத்துபரணி

19. ஆயிரக்கணக்கான யானைகளைப் போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்குப் **பரணி** என்பது பெயர்.
20. கலிங்கத்துப்பரணி தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று
21. பரணி இலக்கியங்களுள் முதலில் தோன்றிய பரணி நூல் – கலிங்கத்துப்பரணி
22. கலிங்க மன்னன் அனந்தபன்மன் மீது முதல் குலோத்துங்கச் சோழன் போர்த்தொடுத்து வெற்றிபெற்றான். அவ்வெற்றியை கூறும் நூல் – கலிங்கத்துப்பரணி
23. கலிங்கத்துப்பரணி நூலில், **ஐந்நூற்றுத் தொண்ணூற்றொன்பது தாழிசைகள்** உள்ளன.
24. சயங்கொண்டாரின் சமகாலப் புலவரான ஒட்டக்கூத்தர் இந்நூலைத் **'தென்தமிழ்த் தெய்வப்பரணி'** எனப் புகழ்ந்துள்ளார்
25. கலிங்கத்துப்பரணியை இயற்றியவர் சயங்கொண்டார்.
26. சயங்கொண்டார், திருவாரூர் மாவட்டத்திலுள்ள தீபங்குடி என்னும் ஊரினர்.
27. **முதல் குலோத்துங்கச் சோழனின் அரசவைப் புலவராகத்** திகழ்ந்தவர் - சயங்கொண்டார்
28. "பரணிக்கோர் சயங்கொண்டார் எனப் **பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்** பாராட்டியுள்ளார்".
29. **இசையாயிரம், உலாமடல்** ஆகிய நூல்களையும் சயங்கொண்டார் இயற்றியுள்ளார்.
30. சயங்கொண்டார் காலம் **கி.பி. பன்னிரண்டாம்** நூற்றாண்டு.
31. "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவ னுக்கு வகுப்பது பரணி" - **பன்னிரு பாட்டியல்**
32. "தீயின் வாயினீர் பெறினு முண்பதோர்
    சிந்தை கூரவாய் வெந்து லர்ந்துசெந்", - **கலிங்கத்துப்பரணி**
33. "எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது கலிங்கத்துப்பரணியே" எனக் கூறியவர் – **அறிஞர் அண்ணா**

### உலகளாவிய தமிழர்

34. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி" எனக் கூறும் நூல் – புறப்பொருள் வெண்பாமாலை
35. "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" எனக் கூறியவர் – ஔவையார்
36. "சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டு கடல் கடந்து சென்ற குறிப்பு" இடம்பெற்ற நூல் – மணிமேகலை
37. தமிழர் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளில் உள்ளாட்சித் தேர்தல்களில் வெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்புகளை ஏற்கின்றனர்.

### திரு.வி.க

38. தமிழ்த்தென்றல் எனப் போற்றப்படுபவர் – திரு.வி. க
39. பிறந்த ஊர் – சென்னைக்கு அருகேயுள்ள துள்ளம்
40. பெற்றோர் – விருத்தாசலனார்-சின்னம்மை
41. பிறந்த ஆண்டு – 26.08.1883
42. படிப்பு – இராயப்பேட்டையிலுள்ள வெஸ்லி பள்ளி
43. திரு.வி.க கதிரைவேலர் என்பவரிடம் தமிழ் பயின்று தமிழ் பேராசிரியராக உயர்ந்தார்.
44. திரு.வி.க உரைநடை எழுதுவதில் வல்லவர்.

**45.** "திரு. வி. க விற்கு வாய்த்த மொழிநடை 'மலை' எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்துள்ளது" எனக் கூறியவர் - தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

**46.** "நான் தனியாக வாழவில்லை; தமிழோடு வாழ்கிறேன்" எனக் கூறியவர் – திரு.வி.க

**47.** இறப்பு – செப்டம்பர் திங்கள் பதினேழாம் நாள் (1953)

**உரைநடை நூல்கள்**

- முருகன் அல்லது அழகு
- சைவத்திறவு
- சைவத்தின் சமரசம்
- கடவுட் காட்சியும் தாயுமானவரும்
- இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்
- தமிழ்நாடும் நம்மாழ்வாரும்
- நாயன்மார் வரலாறு
- தமிழ்நூல்களில் பௌத்தம்,
- காதலா? முடியா? சீர்திருத்தமா?
- என் கடன் பணிசெய்து கிடப்பதே
- இந்தியாவும் விடுதலையும்
- தமிழ்ச்சோலை, உள்ளொளி

**செய்யுள் நூல்கள்**

- முருகன் அருள்வேட்டல்
- திருமால் அருள்வேட்டல்
- கிறித்துவின் அருள்வேட்டல்
- அருகன் அருள்வேட்டல்
- உரிமை வேட்டல்
- பொதுமை வேட்டல்
- பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியமும்

48. தேசபக்தன், நவசக்தி என்னும் இதழ்களின் வாயிலாகத் தொழிலாளர் முன்னேற்றம்பெறப் பாடுபட்டவர்

**ஆகுபெயர்**

49. சொல்லாகுபெயர் - வள்ளுவர்சொல் வாழ்க்கைக்கு இனிது

50. தானியாகுபெயர் - பாலை இறக்கு

**பொருள்கோள்**

51. பொருள்கோள் எண்வகைப்படும்

52. ஒரு செய்யுளிலுள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்ச்சிக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொள்ளும் முறை – பொருள்கோள்

53. **விற்பூட்டுப் பொருள்கோள்** - வில்லின் இருமுனைகளையும் இணைத்துக் கட்டுதல்போலச் செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருத்துவது விற்பூட்டுப் பொருள்கோள். இதனைப் பூட்டுவிற் பொருள்கோள் எனவும் கூறுவர்.

(எ.கா.) "**நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு**"

54. **தாப்பிசைப் பொருள்கோள்** - ஊஞ்சலின் நடுநின்ற கயிறு முன்னும் பின்னும் சென்று வருவதுபோலச் செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொற்களுடன் பொருந்திப் பொருளைத் தருவது தாப்பிசைப் பொருள்கோள். தாம்பு + இசை = தாப்பிசை, ஊஞ்சல் கயிறு அசைதல் போல. (தாம்பு = ஊஞ்சல்கயிறு)

(எ.கா.) – "**இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை**".

## இயல் 3

**உமர்கய்யாம் பாடல்கள்**

**1.** உமர்கய்யாம் பாடல்கள் தொகுப்பின் ஆசிரியர் – கவிமணி தேசிக விநாயகனார்.

**2.** இம்மை மறுமை பற்றி உமர்கய்யாம் எழுதியுள்ளது – ரூபாயத்

**3.** கவிமணி பிறந்த ஊர் – கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேரூர்

**4.** கவிமணியின் பெற்றோர் – சிவதாணு, ஆதிலெட்சுமி

**5.** கவிமணி நூல்கள் - மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், குழந்தைச் செல்வம், ஆசிய ஜோதி

**6.** கவிமணியின் காலம் 1876முதல் 1954ஆம் ஆண்டுவரை.

**7.** உமர்கய்யாம் பாடல்களை தமிழில் மொழிபெயர்த்தவர் கவிமணி தேசிக விநாயகனார்

**8.** உமர்கய்யாம் பாரசீக நாட்டுக் கவிஞர்

**9.** உமர்கய்யாம் பதினோராம் நூற்றாண்டைச் சார்ந்தவர்

**10.** உமர்கய்யாமின் முழுப்பெயர் – கியாதுதீன் அபுல்பாத் உமர் கய்யாம்

**11.** "யாரும் சிறியர் யான் பெரியன்" என்னும் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் – உமர்கய்யாம் பாடல்கள்

**12.** ரூபாயத் செய்யுளின் நூற்றுப் பதினைந்து பாடல்கள் உள்ளன

**13.** ரூபாயத் - நான்கடிச் செய்யுள்

**14.** உமர்கய்யாம் கணிதம், வானவியல் துறையில் புலமை பெற்றவர்.

**பொருள் தருக (11–15)**

**15.** ஆழி – கடல்

**16.** பகர்வது – சொல்வது

**17.** அகன்று – விலகி

18. தெளிவீரே – தெளியுங்கள்
19. துவ்வா – நுகராத

**மணிமேகலை**

20. மணிமேகலையை இயற்றியவர் – கூலவாணிகன் சீத்தலை சாத்தனார்
21. சீத்தலை சாத்தனாரின் இயற்பெயர் – சாத்தன்
22. சீத்தலை சாத்தனார் பிறந்த ஊர் – திருச்சியைச் சார்ந்த சீத்தலை
23. மணிமேகலையை மணம்புரிய விரும்பியவன் – உதயகுமாரன்
24. உடலில் தோன்றும் குற்றங்கள் மூன்று – கொலை, களவு, காமமெனும் கொடிய விருப்பம்
25. மனதில் தோன்றும் குற்றங்கள் – வெஃகல், வெகுளல், பொல்லாக்காட்சி
26. சொல்லில் தோன்றும் குற்றங்கள் – பொய்பேசுதல், புறங்கூறுதல், கடுஞ்சொல், பயனற்றசொல்
27. அமுதசுரபி மணிமேகலைக்கு முன்பு ஆபுத்திரனிடம் இருந்தது.
28. முப்பது காதைகளுள், இருபத்து நான்காவது காதை ஆபுத்திரன் நாடு அடைந்த காதை
29. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வெவ்வேறு நூல்களாயினும் ஒரே கதைத் தொடர்புடையன. எனவே, இவை இரட்டைக்காப்பியங்கள் என வழங்கப்பெறுகின்றன.
30. மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதனால் இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு. இந்நூல்
31. சொற்சுவையும், பொருட்சுவையும், இயற்கை வருணனைகளும் நிறைந்தது
32. இளங்கோவடிகளும் சீத்தலைச் சாத்தனாரும் சமகாலத்தவராவர்.
33. தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.
34. சீத்தலைச் சாத்தனார் காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

**பொருள் தருக (25–34)**

35. வெஃகல் – பெருவிருப்பம்
36. வெகுளல் – கடுஞ்சினம்
37. யாக்கை – உடம்பு
38. வேட்கை – விருப்பம்
39. ஆயம் – தோழியர் கூட்டம்
40. புரைதீர் – குற்றம் நீங்கிய
41. குறளை – புறங்கூறல்
42. பேதைமை – அறியாமை
43. கோடு – கொம்பு
44. அருந்தவர் – அறவண அடிகள்
45. நாத்தொலைவில்லை – சொல்சோர்வின்மை
46. வஞ்சிமாநகரில் உள்ள பத்தினி தெய்வம் – கண்ணகி
47. கோவலனுக்கும், மாதவிக்கும் பிறந்த மகள் – மணிமேகலை
48. மணிமேகலை நூல் பௌத்த சமயத்தைச் சார்ந்தது.
49. மணிமேகலையில் உள்ள காதைகளின் எண்ணிக்கை – 30
50. மறுபிறப்பு உணர்ந்தவளாகக் குறிப்பிடப்படுபவள் – மணிமேகலை
51. மணிமேகலை தீவதிலகை உதவியால் அமுதசுரபியைப் பெறுகிறாள்
52. மணிமேகலைக்கு உதவிய தெய்வம் – மணிமேகலா
53. அறவண அடிகளின் அறிவுரைப்படி ஆதிரையிடம் முதன்முதலில் மணிமேகலை பிச்சைப்பெற்றாள்.
54. மணிமேகலை தப்பிச்சென்ற இடம் – மணிபல்லவத்தீவு
55. "உலகில் பிறந்தோர் அனைவரும் மூப்பினாலும் பிணியினாலும் ஒரு நாள் இறந்து போவார் என்பது இயற்கை" என்று கூறியவர் – அறவண அடிகள்

**உணவே மருந்து**

56. அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது – உணவு
57. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று கூறும் நூல்கள் – புறநானூறு, மணிமேகலை
58. பசிப்பிணிக்கு உணவே மருந்தாகும்.
59. "பசிப்பிணி எனும் பாவி" என்று கூறும் நூல் – மணிமேகலை
60. வெப்ப நாடான நமது நாட்டுச் சமையலுக்குப் **புழுங்கலரிசியே** ஏற்றது.
61. **மஞ்சள்** - நெஞ்சிலுள்ள சளியை நீக்கும்
62. **கொத்துமல்லி** - பித்தத்தைப் போக்கும்.
63. **சீரகம்** - வயிற்றுச் சூட்டைத்தணிக்கும்.
64. **மிளகு** - தொண்டைக் கட்டைத் தொலைக்கும்.
65. **பூண்டு** - வளியகற்றி வயிற்றுப்பொருமலை நீக்கிப் பசியை மிகுவிக்கும்.
66. **வெங்காயம்** - குளிர்ச்சி உண்டாக்கிக் குருதியைத் தூய்மைப்படுத்தும்.
67. **பெருங்காயம்** - வளியை வெளியேற்றும்.
68. **இஞ்சி** - பித்தத்தை ஒடுக்கிக் காய்ச்சலைக் கண்டிக்கும்.
69. **தேங்காய்** - நீர்க்கோவையை நீக்கும்.
70. **கறிவேப்பிலை** - மணமூட்டி உணவு விருப்பை உண்டாக்கும்.
71. **நல்லெண்ணெய்** - கண் குளிர்ச்சியும் அறிவுத்தெளிவும் உண்டாக்கும்.

72. **சீரகம் பூண்டு கலந்த மிளகு நீர்** - சூட்டைத் தணித்துச் செரிமான ஆற்றலை மிகுவிக்கும்.
73. உடலுக்கு வலுவூட்டவும் கழிவு அகலவும் **கீரை** நல்லது.
74. உடலுக்குக் குளிர்ச்சி ஏற்படவும் பித்தம் போக்க - **எலுமிச்சை ஊறுகாயை மோர்ச்சோற்றுடன் உண்ணலாம்**
75. நோய்க்கு முதல் காரணம் – உப்பு
76. 'மீதூண் விரும்பேல்' என்று கூறியவர் – ஔவையார்
77. 'நீரின்றி அமையாது உலகு' எனக் கூறியவர் – வள்ளுவர்
78. "காலை மாலை உலாவிநிதம் காற்று வாங்கி வருவோரின் காலைத்தொட்டுக் கும்பிட்டுக் காலன் ஓடிப் போவானே" எனப் பாடியவர் – கவிமணி
79. திருக்குறளில் மருந்து அதிகாரத்தில் உணவே மருந்தாகும் தன்மையை திருவள்ளுவர் கூறியுள்ளார்.
80. "உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்று உடம்பைக் காத்தலின் தேவையை வலியுறுத்தியவர் – திருமூலர்
81. "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்" – திருக்குறள்
82. நாளொன்றுக்கு 3 லிட்டர் லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்

**அறுசுவையின் பயன்கள்**

83. இனிப்பு – வளம்
84. துவர்ப்பு - ஆற்றல்
85. கைப்பு – மென்மை
86. கார்ப்பு – உணர்வு
87. உவர்ப்பு – தெளிவு
88. புளிப்பு - இனிமை

### நோய் நீக்கும் மூலிகைகள்

89. துளசிச்செடியின் இலைகளை நீரிலிட்டுக் கொதிக்க வைத்து ஆவிபிடித்தால் மார்புச்சளி, நீர்க்கோவை, தலைவலி நீங்கும்.
90. துளசிச்செடியின் இலைகளை எலுமிச்சம்பழச் சாற்றுடன் அரைத்துப்போடப் படை நீங்கும்.
91. துளசிச்செடியின் விதைகளைப் பொடி செய்து ஒன்று அல்லது இரண்டு கிராம் அளவு உண்டால் உடற்சூடு, நீரெரிச்சல் ஆகியன அடங்கும்
92. **தூதுவளையின்** வேறுபெயர்கள் –சிங்கவல்லி, ஞானப்பச்சிலை
93. தூதுவளையின் இலைகளை நல்லெண்ணெயில் சமைத்து உணவோடு சேர்த்து இருபத்தொரு நாள் உண்டு வந்தால், **சுவாசகாசம் அகலும், இளைப்பு இருமல்** போகும்.
94. **ஞானப்பச்சிலை என வள்ளலார்** போற்றும் **தூதுவளை** குரல்வளத்தை மேம்படுத்தும், வாழ்நாளை நீட்டிக்கும்.
95. **கீழாநெல்லிச்செடியைத்** தூயநீரில் கழுவி அரைத்து விழுதாக்கிக் ஐம்பது கிராம் அளவுள்ள விழுதை இருநூறு மில்லி லிட்டர் எருமைத்தயிருடன் கலந்து, காலை ஆறு மணியளவில்வெறும்வயிற்றில் உட்கொள்ளல் வேண்டும். இவ்வாறு மூன்று நாள்தவிராமல் உட்கொண்டால் **மஞ்சட்காமாலை நோய்** தீரும்
96. கற்றாழையின் வேறுபெயர் – குமரி
97. கருப்பை சார்ந்த நோய்களை குணமாக்க பயன்படுவது – கற்றாழை
98. கற்றாழையில் மருந்தாக பயன்படுவது – சோற்றுக்கற்றாழை
99. முருங்கை பட்டையை அரைத்து தடவினால் – முறிந்த எலும்பு விரைவில் கூடும்
100. பூச்சிக்கடியால் கை கால்களில் வரும் தடிப்பை குணமாக்க, மேனி துலங்க பயன்படுவது – குப்பைமேனி
101. கரிசாலங்கண்ணிக்கு வழங்கப்படுகின்ற வேறுபெயர்கள் – கையாந்தகரை,பிருங்கராசம், தேகராசம், கரிசாலை
102. இரத்த சோகை, மஞ்சட்காமாலை முதலிய நோய்களுக்கு நல்ல மருந்தாக பயன்படுவது – கரிசலாங்கண்ணி
103. கண்பார்வை தெளிவாக்கவும் நரையை போக்கவும் பயன்படுவது – கரிசலாங்கண்ணி
104. கண்பார்வையை ஒழுங்குபடுத்தவும், உடலை வலுவாக்கவும் பயன்படுவது – **முருங்கைக்கீரை**
105. **மணித்தக்காளிக் கீரை** வாய்ப்புண், குடற்புண்ணைக் குணமாக்கும்.
106. **முசுமுசுக்கைக் கொடியின்** வேரைப் பசுவின்பாலில் ஊறவைத்து, உலர்த்திப் பொடியாக்கிப் பசும்பால், மிளகுப்பொடி, சருக்கரையுடன் உண்டு வந்தால் இருமல் நீங்கும்.
107. **அகத்திக்கீரை**, பல் சார்ந்த நோய்களைக் குணமாக்கும்.
108. **வல்லாரை** நினைவாற்றல் பெருக உதவும்.
109. **வேப்பங் கொழுந்தைக்** காலையில் உண்டு வந்தால், மார்புச்சளி நீங்கும்
110. **வேப்பிலையை** அரைத்துத்தடவினால் அம்மையால் வந்த வெப்புநோய் அகலும்.
111. தமிழ் மருந்துகள் என்ற நூலின் ஆசிரியர் – கி .ஆ .பெ . விசுவநாதன்

### தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில் இடம்பெற்றுள்ள உருவகம்

112. கடலால் சூழப்பட்ட உலகம் - தாயாகவும்
113. பரதகண்டம் - அத்தாயின் திருமுகம்
114. தக்காணமாகிய தென்னிந்தியா - அத்திருமுகத்தில் அழகுற அமைந்துள்ள நெற்றி
115. தமிழ்த்திருநாடு - அந்நெற்றியில் விளங்கும் பொட்டாகவும்
116. தமிழ்மொழி - அப்பொட்டிலிருந்து எழும் புதுமணம்